# தீர்வை வெளியிட்டால் நாட்டில் கலவரம் வெடிக்கும்


விலை ரூபா 5. 00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 சித்திரை 28 இதழ் 96
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 11 - 5 - 1995


## சந்திரிகா கூறுகிறார்

[கொழும்பு]
தமிழ் மக்களின் இனப்பிரச்னைக்கான தீர்வை தான் முன் கூட்டியே தீர்மானித்து விட்டதாகவும், இத்தீர்வுத் திட்டத்தை முதலில் விடுதலைப் புலிகளிடமே தெரிவிக்க விரும்புவதாக ஜனாதிபதி சந்திரிகா நேற்று தம்மை சந்தித்த தமிழ்க்கட்சிகளின் பிரதி நிதிகளிடம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா இது பற்றி மேலும் தெரிவிக்கையில்:

தமிழர் பிரச்னைக்கான தீர்

(6ம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் நேற்று திடீர் பூமியதிர்ச்சி

(அம்பாறை)
அம்பாறையில் நேற்று நண்பகல் பூமியதிர்ச்சி ஏற்பட்டதில் சில கட்டிடங்கள் சேதமடைந்துள்ளன.

நேற்று நண்பகல் 11-30 மணியளவில் அம்பாறை உதவி அரசாங்க அதிபர் கட்டிடம் அமைந்துள்ள பகுதியில் சில செக்கன்கள் திடீர் பூமியதிர்ச்சி ஏற்பட்டது.

இதனால் அப்பகுதியிலுள்ள சில கட்டிடங்கள் சேதமடை

(6ம் பக்கம் பார்க்க)

★ ஈரப்பெரியகுளத்தில் விடுதலைப் புலிகளால்

# பொலிஸ் நிலையம் தகர்த்தழிப்பு

# 17 பொலிஸார் உயிரிழப்பு

## சப் இன்ஸ்பெக்டரும் பலி; ஐவர் ஊர்காவல் படை

[வவுனியா]
வவுனியா-அநுராதபுரம் எல்லைப் புறத்தில் உள்ள ஈரப்பெரியகுளம் பகுதியிலுள்ள பொலிஸ் நிலையத்தின் மீது விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை மேற்கொண்ட திடீர்த் தாக்குதலில் பொலிஸ் அதிகாரிஉட்பட 17 பேர் பலியானார்கள். பொலிஸ் நிலையமும் தீயிட்டுஎரிக்கப்பட்டதுடன் பெருமளவு ஆயுதங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றியுள்ளனர்.

(6-ம் பக்கம் பார்க்க)

## இராணுவ அதிகாரிகள் இந்தியா பயணம்

(கொழும்பு)
இராணுவ உயர் அதிகாரிகள் அடங்கிய குழுவொன்று இந்தியா சென்றுள்ளது.

இந்தியாவிலிருந்து இலங்கைப் படையினருக்கு ஆயுத, படை, மற்றும் இராணுவ ஆலோசனைகள் பெறுவது பற்றி பேச்சுக்கள் நடாத்தவே

(6-ம் பக்கம்பார்க்க)

## வவுனியா இராணுவ முகாமில் ஏழு தமிழ் இளைஞர் சுட்டுக்கொலை

(வவுனியா
வவுனியாவில் இராணுவ முகாமொன்றில் தடுத்துவைக்கப்பட்டிருந்த ஏழு அப்பாவித் தமிழ் இளைஞர்களை கடந்த சனிக்கிழமை இரவு இராணுவத்தினர் சுட்டுக் கொலை செய்துள்ளனர்.

இத்தகவலை 'யுக்திய' பத்திரிகை வெளியிட்டுள்ளது.

இந்த ஏழு இளைஞர்களும் எதுவித காரணமுமின்றி தடுத்து வைக்கப்பட்டதுடன் அவர்கள் ஈவிரக்கமின்றி சுட்டுக்கொல்

(6-ம் பக்கம் பார்க்க)

## பலாலி விமான தளத்தில் சிறிய விமானத்தை இறக்குக

(கொழும்பு)
சிறிய ரக விமானம் ஒன்றை முதலில் பலாலி விமான நிலையத்தில் தரை இறக்கும் முயற்சியை உடன் மேற்கொள்ளுமாறு பாதுகாப்பு அமைச்சு விமானப்படைத்

(6-ம் பக்கம் பார்க்க)

## க.பொ.த. (உயர்தர) பரீட்சை பிற்போடப்படும் சாத்தியம்!

(கொழும்பு)
பல்கலைக்கழக ஆசிரியர்சங்கம் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருவதால்எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சை பிற்போடப்படக்கூடும் என்று தெரிவிக்கப்படுகிறது

இந்த பரீட்சைக்கானவினாத்தாள்கள் பல்கலைக்கழக ஆசிரியர்களால் தயாரிககப்பட்டு, பரீட்சைத் திணைக்களத்துக்குக் கொடுக்கப்படுவதுண்டு. இப்போது இவர்கள் வேலை

(5ம் பககம் பார்க்க)

## ஒரு லட்சம் இந்தியத் துருப்புகள் தமிழகம் நோக்கி நகர்வு?

[கொழும்பு]
இந்தியப் படையினரில் சுமார் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட துருப்புக்கள் தற்போது தமிழகம் நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாகவும் ஆயினும் இத்துருப்புக்கள் இலங்கை ஜனாதிபதி சந்திரிகாவின் வேண்டுகோளுக்கிணங்க இலங்கைக்கு அனுப்பப்படுவதற்காக நகர்த்தப்படுகின்றனவா என்பது குறித்து எத்தகைய ஊர்ஜிதமான செய்திகளும் கிடைக்கவில்லையென கொழும்

(5ம் பக்கம் பார்க்க)

## இன்றும் நாளையும் படகு சேவை

(யாழ்ப்பாணம்)
கிளாலி - பூநகரி படகு சேவை இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிழமையும் வழமையான நேரத்திற்கு நடைபெறுமென விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். சி

## வெளிநாட்டு இராணுவ உதவி பிரச்னையை மேலும் சிக்கலாக்கும்

(கொழும்பு)
வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு இலங்கை அரசு வெளிநாட்டு இராணுவ உதவியை கோருமேயானால் இந்தப் பிரச்னைக்கு ஒரு காலமும் தீர்வு காணமுடியாது போகும். இப்படியான செயல் பிரச்னையை மேலும் மேலும் அதிகரிக்கவே செய்யும்.

இவ்வாறு முஸ்லீம் காங்கிரஸ் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற பிரதி தவிசாளருமாகிய ராப் ஹக்கீம் 'சண்டே லீடருக்கு' அளித்த பேட்டியில் தெரிவித்தள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: அரசாங்கம் விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் தொடர்வதற்கான வழிமுறைகளைக் கண்டறியவேண்டும். ஜனநாயக முறையில் தெரிவு

(5-ம் பக்கம் பார்க்க)

## வடக்கில்விமானத்தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாம்

(கொழும்பு)
வடபகுதி மீதான விமான தாக்குதல்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுமென இராணுவ வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன.

அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கையில்: பரந்தன, பூநகரி போன்ற இடங்களில் அதிவேக ஜெட் விமானங்கள் தாக்குதல்கள் மேற்கொண்டதாகவும் தெரிவித்துள்ளன.

வடக்கில் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட விமானத் தாக்குதல் தொடர்ந்தும் நடைபெறுமென இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க தெரிவித்தார். க-சி


யாழ் நகரில் நம்பிக்கைக்குரிய தங்க நகைகளை மாற்றுக்குறையாத தங்கத்தில் செய்து வழங்கும் நிறுவனம்

★★★ நதியா நகை மாடம் ★★★

2, சந்தோசம் வீதி
[கஸ்தூரியார் வீதி]
யாழ்ப்பாணம்

(ஏ 4923)

## புலிகள் என்று கூறி
# தமிழர்களிடம் பணம் பறிக்க முயன்ற முன்னாள் இன்ஸ்பெக்டர் கைது!

(கொழும்பு)

புலிகள் என்று கூறி தமிழ் தம்பதியை கைதுசெய்யப் போவதாக மிரட்டிய முன்னாள் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொள்ளுப்பிட்டியில் லொட்ஜ் ஒன்றில் தங்கியிருந்த தமிழ் தம்பதியை விடுதலைப் புலிகள் உறுப்பினர் எனக்கூறி முன்னாள் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் விசாரணை செய்தாராம்.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் என தன்னை அறிமுகப்படுத்திய இவர் குறிக்கப்பட்ட தமிழ் தம்பதியை மிகத்தீவிரமாக விசாரணை செய்தாராம்.

விசாரணையின் போதுபணம் பறிக்கும் நோக்குடன் இந்த முன்னாள் இன்ஸ்பெக்டர் நடந்து கொண்டாராம். இதனால் சந்தேகமடைந்த குறிப்பிட்ட லொட்ஜ் உரிமையாளர் கொள்ளுப்பிட்டி பொலிஸாருக்கு புகார் செய்தார்.

மேற்படி லொட்ஜுக்கு விரைந்த பொலிஸார் குறிக்கப்பட்ட நபரைக் கைது செய்துள்ளனர்.

பொலிஸாரின் முற்றுகையை அடுத்து குறிக்கப்பட்ட நபர் செய்வதறியாது விளித்தாராம்.

தமிழரிடம் பணம் பறிக்கும் நோக்குடன் இவ்வாறான சம்பவங்கள் கொழும்பு நகரில் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான கைது நடவடிக்கைகளின் போது தமிழர்கள் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ளவேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பலர் இரகசியப்பொலிஸார் எனவும் புலனாய்வு துறையினர் எனவும் தம்மை அடையாளம் காட்டி தமிழர்களை மிரட்டி பணம் பறிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். கொழும்பில் பொலிஸாரின் நடவடிக்கைகளாலேயே இத்த கையமோசடிகள் இடம்பெற்று வருவதாக கூறப்படுகிறது.

இதேவேளை பொலிஸாரினால் கைது செய்யப்படுபவர்களை விடுவிப்பதெனக் கூறியும் பலரிடம் பணம் பறிக்கும் நடவடிக்கையிலும் கொழும்பு நகரில் பல தரகர்கள் செயற்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

கொழும்பில் கைது செய்யப்படும் தமிழர்கள் உடனடியாக தமது உறவினர்களுக்கு தெரிவித்துதமது பாதுகாப்பை உறுதிப்படுத்தி கொள்வதுடன் போலி நபர்களிடமிருந்தும் தப்பித்துக் கொள்ளுமாறும் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன, ரி

# வடகிழக்கில், அடுத்துவரும் நாட்களில் மோதல்கள் உக்கிரமடையலாம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் யாழ். குடாவில் அவ்ரோ விமானங்கள் மீது ஏவுகணைகள்பிரயோகித்ததன் மூலம் அவர்களிடம் ஏவுகணைப் பலம் இருப்பதனை உறுதிப்படுத்தி விட்டது

தரையிலிருந்து விண்ணுக்கு செலுத்தும் இந்த ஏவுகணை ரகங்களில் எந்த ரகத்தை விடுதலைப் புலிகள் வைத்திருக்கிறார்கள் என்பதே பெரும் கேள்விக்குறியாகவுள்ளது.

இவ்வாறு திரு. டி. பி. எஸ். ஜெயராஜ் சண்டே லீடருக்கு எழுதியுள்ள கட்டுரையில் தெரிவித்துள்ளார் அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ரஷ்ய தயாரிப்பான சாம் -7 பிரித்தானிய தயாரிப்பான 'பிளோபைப்' ஐ. அமெரிக்க தயாரிப்பானஎவ் ஐ எம்-92-ஏ அதாவது ஸ்ரிங்கர், பிரித்தானிய தயாரிப்பான 'ஜவலின்ஸ்' ஆகிய தர ஏவுகணைகளில் ஒன்றே விடுதலைப் புலிகள் வைத்திருக்கலாம் என ஊகிக்கப்படுகிறது

எனினும் புலிகள்ரஷ்ய தயாரிப்பான சாம்-7 ஐயே பாவிக்கிறார்கள் என்று எண்ண இடமுண்டு. இதற்கு பலமுன் உதாரணங்களை காட்டமுடியும்.

முன்னர் புலிகள் இந்தியாவில பயிற்சிபெற்றபோது சாம் 7 ஏவுகணையிலேயே பயிற்சி பெற்றுள்ளனர். அத்தோடு அமெரிக்க, பிரிட்டிஷ் தயாரிப்பு ஏவுகணைகள் விலையுயர்ந்தவை. மேலும் 7ஷ்ய கூட்டமைப்பு உடைந்தபின் பிரிந்துபோன அந்த நாடுகளில் கள்ளச் சந்தையில் சாம்-7 ஐ பெறுவது சுலபம் இதனை புலிகள் இலகுவில் பெற்றிருப்பர்.

உக்கிரேனினுள்ள கீவ்துறை முகத்தில் புலிகள் பல ஆயுதங்களை கப்பலில ஏற்றியதாக முன்னர் அறிக்கைகள் கிடைத்துமுள்ளன.

சுட்டு வீழ்த்தப்பட்ட அந்த அவ்ரோ விமானத்தின், விமான ஓட்டி சுஜீவபத்திரன, தான் ஏவுகணை சுடப்பட்டதை கண்டதாகவும் தன் விமானத்தை நோக்கி ஏவுகணை துரத்துவதாகவும் விமான தளத்துடன் தொடர்பு கொண்டு பேசியுள்ளார்; இதனால் ஏவுகணையை புலிகள் பாவிப்பது நிரூபணமாகிவிட்டது.

ஏவுகணை பிரயோகத்தின் பின் மோதலின் நிலையும் தரமும் வெகுவாக மாற்றம் கண்டுள்ளது.

காலத்துக்குக் காலம் பல படைமுகாம்கள் புலிகளிடம் வீழ்ச்சி கண்டதும், படையினர் தரையில் நகர்வதை தவிர்த்து கடற்கரையை அண்டிய பகுதிகளில் நிலைகொண்டு நிற்கிறார்கள். வவுனியாவுக்கப்பால் இந்த நிலையே நிலவுகிறது.

புலிகள் கடல் ஆதிக்கத்தையும் கடற்புலிகளின் தாக்குதல் மூலம் கைக்கொண்டபின், இந்த முகாம்களுக்கு விமான மூலமே சகல விநியோகங்களும் மேற்கொள்ளப்பட்டன.

தற்போது புலிகள்சாம் 7ரக ஏவுகணையை பிரயோகித்து விமானங்களை வீழ்த்தியபின் வடக்கில் இராணுவ சமநிலையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்திவிட்டது சகல விமானப் பறப்புகளும்இப்பகுதியில் நிறுத்தப்பட்டமை இதற்கு உதாரணம்.

விமான ஓடுபாதையை விஸ்தரித்து இதனை முறியடிக்கலாம். ஆனால் அது இப்போது சாத்தியமில்லை. அல்லது தற்போதைய படையினர் முகாம்களை விஸ்தரிக்கலாம். அதற்கு கூடிய படையினர் தேவைப்படும். குறைவான படையினரைக் கொண்டு விஸ்தரித்தால் புலிகளிடம் வீழ்ச்சியுற நேரிடும்,

இனிவரும் கிழமைகள்பெரும் நெருக்கடியான காலமாகத் தோன்றும். புலிகள் எவ்வகையில் ஏவுகணைகளைப் பிரயோகிக்கப்போகிறார்கள் என்பதிலும் இது தங்கியுள்ளது தற்போது ஏற்பட்டுள்ள மாறுபட்ட நிலைமையை எவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கையாளப்போகிறார் என்பதிலுமே யாவும் தங்கியுள்ளது. (கே சி)

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995—05-11**

வியாழன் இரவு

- 08-02 சொல்லுங்கள் பார்க்கலாம்
- 08-10 சித்த மருத்துவ குறிப்புகள்
- 08-20 உழைப்போம் உயர்வோம் நிகழ்ச்சியில் ''நன்னீர் மீன் வளர்ப்பின் நவீனமுறைகள்'' கேள்வி பதில
- 08-30 செய்திகள்
- 08-40 மொழியும் வாழ்வும்
- 08-50 எங்களின் தேசம

**1995—05—12**

வெள்ளி காலை

- 07-02 மாவீர வணக்கம்
- 07-15 பணியாரம்
- 07-30 செய்திகள்
- 07-35 பத்திரிகைச் செய்திகள்
- 07-40 தாயகப் பாடல்கள்

### தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

**1995—05—11**

வியாழன் மாலை

- 05-01 சிந்தனைச்சிதறல்
- 05-02 எழுச்சிக்கீதம்
- 05-10 புதியவை
- 05-15 மழலைகளுக்காக
- 05-30 இசையும் கதையும்
- 06-00 சிந்தனைக்குச் சில விநாடிகள்
- 06-02 பொன்விளையும் பூமி
- 06-15 விளையாட்டுச் செய்திகள் விளையாட்டுச் செய்திகளைத் தொடர்ந்து கேள்வி பதில்.

### திருமலை மாவட்டத்தில் சிங்களவருக்கு ஆயுதம்!

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் ஊர்காவல்படையினர் என்ற போர்வையில் சிங்களவர்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஒவ்வொரு குடும்பத்தின் பாதுகாப்புக்குமென வழங்கப்படும் ஆயுதங்களில் ஒரு குடும்பத்தில் மூன்று பேருக்கும் வழங்கப்பட்டுள்ளதாக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்

இது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகாவுடன் கதைக்கப் போவதாகவும் அவர் கூறினார்.

திருகோணமலையில் சிங்கள மக்கள் சுதந்திரமாக நடமாடித் திரிகிறார்கள். அவர்களுக்கு ஆயுதம் தேவையில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

திருமலையில் தொடர்ந்து நடைபெறும் சிங்களக்குடியேற்றங்கள் குறித்து ஆதாரங்களோடு அம்பலப்படுத்தி வருகிறோம் என்றும் அவர் கூறினார். ரி


### யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் இலங்கை

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம் II பிரிவு 'பி' பதவிக்கான விண்ணப்பங்கள் 1995-06-09ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

சம்பள அளவுத் திட்டம்: ரூபா 2890—10X55—7X65—3895 மாதமொன்றுக்கு

தகைமைகள்:

இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் 05 திறமைச் சித்திகளுடன் க. பொ. த (சாதாரண தர)தேர்வில்ஆறுபாடச் களில் சித்தி. திறமைச் சித்திகளுள் கணிதம், விஞ்ஞானம் என்பன அடங்கியிருத்தல் வேண்டும். அத்துடன் க. பொ. த [உயர்தர] தேர்வில் விஞ்ஞான பாடங்களில் 3 பாடங்களில் சித்தி.

வயது:

40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

தெரிவு:

உளச்சார்பறித் தேர்வின் மூலமும் நேர்முகப் பரீட்சையின் பரீட்சையின் மூலமும். குறிப்பு:

தொழில் நுட்ப / உத்தியோகத்தர் சேவையின் 'பி' பிரிவின் கீழான நியமனம் பெறுபவர் முதலில் ரூபா 2890/- மாதாந்த நிலையான சம்பளத்தில் மூன்றாண்டுகளுக்கு பயிலுனர் தொழில் நுட்ப உத்தியோகத்தராக நியமனம் பெறுவர்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் அல்லது பல்கலைக் கழக நிதிக்கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் ரூபா20/- செலுத்திய பின்னர் இப்பல்கலைக் கழகத்தில் தாபனக்கிளை பிரதிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய படிவங்களில் மாத்திரம் விண்ணப்பங்கள் செய்யப்படவேண்டும். தபால் மூலம் படிவங்களையும் விபரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக, நிதியாளரின்பெயரில் பெறப்பட்ட ரூபா20/-பெறுமதியான காசுக்கட்டளை/ தபாற் கட்டளையுடன் 23X10 ச. மீ. அளவுடைய சுயமுகவரியிட்ட ரூபா 2/- முத்திரையொட்டப்பட்ட கடித உறையையும் அனுப்புதல்வேண்டும். விதிக்கப் பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அரசாங்க திணைக்களங்கள் அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்களூடாக விண்ணப்பித்தல்வேண்டும்.

விண்ணப்ப முடிவு தேதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் விவரங்கள் தெளிவின்றிக் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

குறிப்பு:-

விண்ணப்பப்படிவங்களையும் இதர விபரங்களையும் கொழும்பு-13 ஆட்டுப்பட்டித் தெரு 154ஆம் இலக்கத்திலுள்ள யாழ்ப்பாண கூட்டுறவுக் களஞ்சியத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1995-05-08 (எ-4921)



### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

தொழில் நுட்பவியலாளர் தரம் II பிரிவு 'பி' பதவிக்கான பரீட்சை 1995-05-13ம் திகதி [சனிக்கிழமை]

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் மேற்படி பதவிக்கான கல்வித் தகைமைகளில் தற்பொழுது மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளமையால் முன்னர் விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்பட்டவாறு மேற்குறிப்பிட்ட பதவிக்கான பரீட்சை 1995-05-13 அன்று நடைபெறமாட்டாதென்பதை அறியத் தருகின்றேன்.

இப்பதவிக்காக விண்ணப்பங்கள்கோரப்பட்ட 1994-12-05ஆம் திகதியிடப்பட்ட விளம்பரம் இத்தால் இரத்துச்செய்யப்படுகின்றது.

பதிவாளர்

யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1995-05-08.

(எ-4920)



## நூறுவது ஆண்டு நிறைவு

பரமேஸ்வராக்கல்லூரியின் முன்னைநாள் அதிபர்

**திரு. சு. நடேசபிள்ளை அவர்களின்**

நூறுவது ஆண்டு நிறைவு 20 - 5 - 1995 ஆகும். அவர் 21-5-1895ல் பிறந்தார். அன்னாரின் நினைவுகூரும் கடமைபரமேஸ்வராக்கல்லூரியின் பழைய ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் Ramanathan Trust அங்கத்தவர்களைச் சாரும். சைவத்திற்கும், தமிழுக்கும் அவர் ஆற்றிய பணிகளுக்கு நன்றிக் கடன்கள் ஏனையோருக்கும் உண்டு.

ஆகவே அவரை நினைவுகூர விரும்புவோர்க்கு இதை அறியத்தருகிறேன்.

ஓர் பழைய மாணவன்

(சி-1474)

### மணிவாக்கு

நன்மையின் திறவு கோல் தர்மம். கல்வியின் திறவுகோல் தெரியாததை கேட்பது. வெற்றியின் திறவு கோல் பொறுமை, பதவியின் திறவுகோல் மக்களின் அன்பு.

- மு.. வ

# மேலும் 6 போர் விமானங்களை விமானப்படையினர் வாங்குவர்

(கொழும்பு)

விமானப்படைக்கு மேலும் 6 விமானங்களை வெளிநாடுகளிலிருந்து கொள்வனவு செய்ய அரசு திட்டமிட்டுள்ளது.

தற்போது விமானப்படையினரிடம் மூன்று அவ்ரோக்கள் மட்டுமே உள்ளது ஏற்கனவே புலிகளால் இரண்டு அவ்ரோக்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதால் விமானப் படையினர் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கிவருகின்றனர்.

வெளிநாடுகளிலிருந்து மேலதிக விமானங்களை பெறுவதில் தற்போது இலங்கை அரசு தீவிர நாட்டம் காட்டி வருகிறது.

இதேவேளை இரு அவ்ரோ விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்ட பின்பு பலாலிக்கான சகல விமான ஓட்டமும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. எனினும் ஒரு சில விமானங்களை அனுப்பும் முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை விடுதலைப்புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட இரண்டாவது அவ்ரோ விமானம் குறித்த விசாரணைகள் நடைபெறுவதற்கான சாத்தியங்கள் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இரண்டாவது அவ்ரோ விமானம் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்தில் வீழ்ந்ததால் அதற்கான விசாரணை நடைபெறமாட்டாதெனவும் தெரிவிக்கப்படுகிறது. சி

### பயிர்செய்கை கடனுதவி

(யாழ்ப்பாணம்)

விவசாய மேம்பாடு கருதி வெங்காயம் மற்றும் மிளகாய் போன்ற பயிர் செய்கைகளை மேற்கொள்ளவென வடமராட்சிக் கோட்டத்தைச் சேர்ந்த 126 விவசாயிகளுக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் பதினொரு லட்சத்து என்பத்தியேழாயிரம் ரூபாவை கடனாக வழங்கியுள்ளது.

நிறுவன கிராமியஉற்பத்திக் குழுப் பகுதியினரின் கிராமிய நிதியத்தினூடாக கடந்த மாதம் இக் கடனுதவி வழங்கப்பட்டது.

### நமது நோக்கு

### கதை அளப்பு

பொய்யான தகவல்களை வெளியிட்டு மக்களைப் பீதிகொள்ளச் செய்வதில் இலங்கைப் பொலிசார் மிகவும் கெட்டிக்காரர்கள்.

அவர்களை இரட்டைப் பயங்கரவாதிகள் எனக் கொழும்புத் தமிழ்த் தினசரி ஒன்றின் ஆசிரியத் தலையங்கமே கண்டித்திருக்கிறது.

அரசுசார்பான பத்திரிகையே அவ்வாறு கணித்திருப்பது மக்களின் கவனிப்புக்குரியது.

மட்டக்களப்பிலிருந்து வந்த டஸ்ஸில் சக்தி வாய்ந்த வெடி பொருட்கள் மீட்கப்பட்டன எனச் செய்தி வெளியிட்டு தமது திறமையைத் தாமே புகழ்ந்து மகிழ்ந்தனர் படையினர்.

ஆனால் அந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை. ஏனெனில்-அப்படிக் கண்டுபிடிக்கப்பட்டது வெடிப் பொருட்கள் அல்ல, வெறும் களிமண்ணே என இரசாயனப் பகுப்பாய்வாளர்கள் உறுதிப்படுத்தி யிருக்கிறார்கள்.

மக்களைப் பீதிகொள்ளச் செய்து, பரபரப்பை உண்டாக்கி, தாம் ஏதோ பெரும் பாதுகாப்பு நடவடிக்கை எடுத்துவருவதாகப் பிரமாதப்படுத்திச் செய்தி வெளியிடுவது நாட்டு நலனுக்கு உகந்தது அல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

இப்படிப் பொய்யான செய்திகளை வெளியிடுவதற்கான வேறு காரணங்களும் இருப்பதாகச் சந்தேகம் எழுப்பப்படுகின்றது:

புலிகள் வந்துவிட்டார்கள், வெடிப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று கூறிக்கொண்டு அப்பாவித் தமிழ் மக்களை வகைதொகையின்றிக் கைதுசெய்து இம்சிக்கத்தான் இப்படிச் செய்திகளை வெளியிடுகிறார்களா?

கைதுசெய்து, விசாரணைக்காக அழைத்துச் சென்று சில நாட்களுக்குப் பின் விடுதலைசெய்வதற்குள் வருமானம் தரும் தொழில் ஒன்று நடைபெறுவதாகவும் செய்திகள் வருகின்றன.

நாடு பற்றி எரியும் போது பிடுங்கியது லாபம் என்ற தோரணையில் நடைபெறும் 'தொழில்கள்' சில நிச்சயமாகக் கண்டிக்கப்பட வேண்டியதே.

பாதிக்கப்படும் மக்கள் விடும் கண்ணீர் அரசை அறுக்கும் அரம் என்பதை அரசு விரைவாக உணர வேண்டும்!

# மட்டு. எல்லையில் 1200 சிங்களக் குடும்பங்கள் அடுத்த மாதம் குடியேற்றப்படும்!

(மட்டுநகர்)

மட்டக்களப்பு எல்லைப் புறப் பகுதியில் அடுத்த மாதம் 1200 சிங்களக குடும்பங்களை குடியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மகாவலி வலயத்திட்டத்தின் கீழ் இந்தச் சிங்களக்குடும்பங்கள் குடியேற்றப்படவுள்ளன.

முதலில் 400 குடும்பங்களும் பின்னர் 800 குடும்பங்களும இவ்வாறு குடியேறறப்படவுள்ளன பொ. ஐ. மு. அரசு ஆட்சிககு வந்ததும் முதலாவதாக நடைபெறும் சிங்கள ஆக்கிரமிப்பு நடவடிக்கை இதுவாகும்

குடியேற்றப்படும் இந்தச் சிங்களக் குடும்பங்களுக்கு பாதுகாப்பு வழங்கும் நோக்குடன் இப்பகுதியில் இராணுவ முகாம் மற்றும் பொலிஸ் நிலையம் நிறுவப்படவுள்ளது.

தமிழ்க்கிராமங்களில சிங்கள ஆக்கிரமிபபை பலபபடுததும நோக்குடன் இந்தக்குடியேற்றம் இடம் பெறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இத்தகைய சிங்களக்குடியேற்றங்கள் தமிழ்ப குதிகளில் மேலும் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. ரி

### இராசி பலன்

11-05-1995

வியாழக்கிழமை

(தமிழுககு சித்திரை-28)

ஏகாதசி முற்பகல் 10-03 வரை; உத்தரம் பி. ப. 10-07 வரை மரணயோகம், இராகு காலம் பி. ப. 12-04 முதல் 2-54 வரை சுபவேளை காலை 7-24 முதல் 8-54 வரை

மேடம் மனக்களிப்பு புதிய முயற்சி, குடும்ப சுகம்.

இடபம்- முரண்பாடு, தொழில் கஷ்டம் பணமுடை.

மிதுனம்- பிதா கவலை. அன்னியர் வெறுப்பு, அலைச்சல்.

கடகம்- தொழில் லாபம், வெற்றிக்களிப்பு, தி[illegible]ானம்

சிங்கம்- அடாவடித்தனம், பயனற்றசெயல் யோசனை.

கன்னி- வீட்டில் சுபகாரியம், மனிதநேயம், பணவரவு.

துலாம்- முட்டிமோதல், உறவினர் பகை, காரிய தடை.

விருச்சிகம்- அதிகாரிகள் பாராட்டு, பிறர்க்கு உதவுதல் தெய்வ தரிசனம்.

தனுசு- எதிர்பாராத நன்மை, கடன் வரவு, மன அமைதி.

மகரம்- சகோதரி துன்பம், குடும்பக் கவலை, மனவேதனை.

கும்பம்- சுபகாரிய செலவு, பெற்றோர் அறிவுரை, இனசன மகிழ்ச்சி.

மீனம்- பிறர் பாராட்டு, தொழில் சிறப்பு, பயண நன்மை.

— ஜோஸ்யர்

# சிறிலங்கா ராணுவத்தினருக்கு இந்தியாவில் தீவிர பயிற்சி

(கொழும்பு)

இந்திய தேசிய பாதுகாப்பு பிரிவினரால் சிறிலங்கா இராணுவத்தினருக்கு தற்போது தீவிர பயிற்சிகள் வழங்கப் பட்டுவருவதாக கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவிதது்ள்ளது.

சிறிலங்கா இராணுவம் கடந்த பல காலமாக பாகிஸ்தானில் பயிற்சிபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

மிக முக்கிய அரச தலைவர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் படையினருக்குமட்டுமே இந்த பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஹரியாணா மாநிலத்தில் அளிக்கப்படும் இப்பயிற்சிக்கு மேலதிகமாக மேலும் பல இராணுவத்தினரை சேர்த்துக் கொள்ளுமாறு சந்திரிகா அரசாங்கம் இந்திய அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டிருப்பதாக 'ரைம்ஸ் ஒவ் இந்தியா' பத்திரிகை தெரிவித்துள்ளது.

தீவிரவாதத்தை ஒழிப்பதற்கு இலங்கைக்கு ஆதரவு வழங்கும் திட்டத்தின் கீழ் இந்தியா மேற்குறிப்பிட்ட உதவிகளை வழங்கிவருவது குறிப்பிடத்தக்கது (ரி)

### பலதும் பத்தும்

### இராசசேகரம்

குலசேகர அரச பரம்பரையில் தோன்றிய தலைசிறந்த பண்டிதர்தான் தண்டிகைக் குலசேகரம்பிள்ளை. ஏறத்தாழ கி. பி. 1530ல இவர் யாரைத் திருமணம் செய்தார்? பரராசசேகரனின் கொள்ளுப் பேரனாகிய சுழிபுரம் கதிர்காமசேகர முதலியாரின் மகளைத்தான். இந்தச் சந்ததியில் தோன்றியவர்களே பெரிய பரிகாரி வைத்திய பரம்பரையினர்.

இப் பரம்பரையில் வந்த வைத்திய மேதை சு. இராசசேகரம் ஜே. பி. காரை நகரில் புகழ்பெற்றிருந்து 1984ல் காலமானார். அவர் நினைவாக... பெரிய பரிகாரியார் ஞாபகார்த்த சித்த வைத்திய சங்கம் 4-7-84ல் வெளியிட்டதே "இராசசேகரம் என்னும் கையேடு.

இதிலே... சுமார் 100 குடிநீர் வகைகள் தொகுக்கப் பட்டுள்ளன. 23 தலைமுறையாகக் கையாண்ட அனுபவக் குடிநீர் முறைகள் பொது வியாதிகள், மாதர், பாலர், வியாதிகளுக்குப் பெரிதும் உதவக்கூடியவையாம்!

— மயூரன்

# துணை மருத்துவர்கள் வேலைநிறுத்தம் காயமடையும் படையினருக்கு பாதிப்பு

## அரசு யோசனை நிராகரிப்பு

(கொழும்பு)

துணை மருத்துவர்களின் வேலைநிறுத்த காரணமாக யுத்தமுனைகளில்காயமடைந்த படையினர் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்த படையினருக்கு போதிய மருத்துவ வசதிகளிருந்தும் அதனை அளிப்பதற்கு துணை மருத்துவர்கள் இல்லாமையினால் பெரும் சிரமப்படவேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை துணை மருத்துவ சேவைகளை சேர்ந்த தொழிற் சங்கப்பிரதிநிதிகள் அரசாங்கம் முன்வைத்த ஆலோசனைகளை மீண்டும் நிராகரித்துள்ளார்கள்.

பதில் சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராய்ச்சி நேற்று நடைபெற்ற கூட்டமொன்றில அரசாங்கத்தின் ஆலோசனைகளை முன்வைத்தார்.

இந்த ஆலோசனைகளில் தமக்கு திருப்தியில்லை என்று தெரிவித்த தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தாம் தொடர்ந்தும் வேலைநிறுத்தத்தை நடத்தப்போவதாக கூறினார்கள்.

ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளில் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக க. பொ. த. உயர்தர பரீட்சை சான்றிதழை தடுக்க வேண்டும் என்பதே அவர்கள் முன்வைத்த கோரிக்கையில் ஒன்றாகும். இது ஒரு நீதியான கோரிக்கை இல்லை என்பதை பதில் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

பெரும்பான்மையான கிராமப்பகுதி இளைஞர்களுக்கு இந்தக் கோரிக்கை நியாயமானதாக இல்லை என்றும் அவர் தெரிவித்தார். (ரி)

### காலை இழந்தார்

(மட்டக்களப்பு)

ஏருவூர் பிரதேசத்தில் தமிழ் பெண்ணொருவர் மிதிவெடியில் சிக்கி தனது வலது காலை இழந்தார்.

ஏருவூர் மணியாபுரம் கிராமத்தில் வசிக்கும் கே. விஜயா (வயது33) என்பவரே தமது வீட்டைப் பார்வையிடச் சென்றபோது 'பட்டா' மிதிவெடியில் அகப்பட்டு தனது காலை இழந்தார். ர-சி

# புலிகளிடம் விமானப் படை 'திவயின' பத்திரிகை தகவல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் வடககு - கிழக்கில் அரச படையினருடன் போராடுவதற்காக விமானப்படைப் பிரிவொன்றை அமைத்துள்ளதாக 'திவயின' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதுவரையில் வடபகுதியில் 40 பேர் விமானப்படைவீரர்களாகச் சேர்த்துக் கொள்ளப் பட்டுள்ள அதேசமயம் மேலும் படை வீரர்களைச் சேர்த்துக் கொள்ள தற்போது நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்கள் அதிகளவில் விமானப்படையில் சேர விண்ணப்பித்துள்ளனர் என்றும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது. ரி

# பொலிஸிலும் தற்கொலைப் பிரிவு அமைக்கக் கோரிக்கை

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் அமைப்பில் உள்ளது போல் சிறிலங்கா பொலிஸிலும் தற்கொலைப் பிரிவு ஒன்றை அமைக்குமாறு

(6ம் பக்கம் பார்க்க)

உரம் இல்லை என்று நீ சொல்லாதே
இயற்கை உரம் உன் காலடியில் மறவாதே

# இலங்கையில் யுத்தம் தொடர்ந்தால் நாடு நரகமாகிவிடும் என அச்சம்

(கொழும்பு)

இலங்கையில் மீண்டும் யுத்தம் வெடித்துள்ளது. திருமலை துறைமுகத்தில் இலங்கை கடற்படையின் இரு கப்பல்கள் விடுதலைப் புலிகளின் தற்கொலைப்படைப் பிரிவால தகர்க்கப்பட்டதுடன் சில மாதங்களாக கடைப்பிடிக்கப் பட்டுவரும் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை விடுதலைப் புலிகள் விலக்கிக்கொண்டதை அடுத்து யுத்தமுனையில் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக கொழும்புப பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கையில்; மோதல் தவிர்ப்பை விலக்குவதாயின் 72 மணி நேரத்திற்குமுன்னர் தமக்கு அறிவிக்கவேண்டும் என்ற ஒழுங்குமுறையை விடுதலைப் புலிகள் இயக்கம் மீறியுள்ளதென அரசாங்கத்தரப்பினர் குற்றம்சாட்டியுள்ளனர். திட்டமிட்ட ஓழுத்தடிப்பை அரசாங்கம் மேற்கொண்டதாலேயே நாம் வேதனையான இம்''டிவிற்கு வரவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதாக புலிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளையில் இந்த யுத்தம் உக்கிரமடைந்தால் முழு இலங்கையும் பேரழிவுக்குள்ளாவது தடுக்கமுடியாதுபோய் விடுமென அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனா.

சரியான புரிந்துணர்வு இல்லாமல் ஆரம்பிக்கப்பட்ட பேச்சுவார்த்தை தோல்வியை சந்திப்பது தவிர்க்க்முடியாததே.

உண்மையான இதய சுத்தியுடன் யுத்தநிறுத்தம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு சமாதான சூழ்நிலை உருவாகும் என்பது இப்போது சந்தேகத்திற்கிடமாயுள்ளது.

யுத்தம் முனைப்புடன் மேற்கொள்ளப்படுவதற்கான சாத்தியக்கூறுகளினல் முழு நாட்டின் பொருளாதாரமும சீரழிவை நோக்கிச் செல்வதோடு மனித உயிர்களும் பெரும் எண்ணிக்கையில் அழியும் ஆபத்து தோன்றியுள்ளது. இப்போரே இறுதிப்போராக இருப்பதற்கான அறிகுறிகளை பெரும் கவலையோடும் விசனத்தோடும் நோக்கும அரசியல அவதானிகள் மொத்த தேசமும் ஒரு மயானமாக மாறி விடுமோவென அஞ்சுகின்றனர்.

பொது இடங்களிலும் வாகனங்களிலும் மீண்டும் குண்டுகள் வெடிக்கலாமென்றும் இதனல் எதிர்கால இலங்கை ஒரு நரகமாக மாறிவிடலாம் என்றும் மக்கள் கவலையுடன் கூடிய திகிலுடன்பேசிக்கொள்கின்றனர்.

தொடரும் யுத்தம் உடனடியாக நிறுத்தப்பட்டு முரண்பாடுகளுக்கான காரணங்கள் இனம் காணப்படுவதோடு, அவை களையப்படவேண்டும் என்பதே பெரும்பாலான மக்களின் அபிப்பிராயமாக உள்ளது என்றும் அப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க சி)

பாடசாலைகளில்

# வீதி ஒழுங்குகள் குறித்து காவல்துறை கருத்தரங்கு

(திருநெல்வேலி)

த'மிழீழ காவல்துறையினரால் பாடசாலை மாணவர்களுக்கு வீதி ஒழுங்கு முறைகள் நன்னடத்தைகள் பற்றி கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வரப்படுகின்றன.

பாடசாலைகள் தோறும் சென்று மாணவர்களது ஒழுக்கங்கள், வீதிப்போக்குவரத்து ஒழுங்கு விதிகள் பற்றியும் இவற்றைப் பின்பற்ருவிடில் ஏற்படும் விபத்துக்கள், விபரீதங்கள். குற்றங்கள் குறித்து அறிவுரைகள் வழங்கப்பட்டு வரப்படுகின்றது.

மேற்படி கருத்தரங்குகளினுல் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் பயன்பெற்று வருவதும் தொடர்ந்தும் ஒழுங்குமுறையீனமும் விபத்துக்களும் ஏற்படாது தவிர்த்துக் கொள்ளப்படுவதற்கான முன்னேற்பாடாக இடம்பெற்று வருவதும் குறிப்படத்தக்கது. 157 ரி

# யுத்தத்திற்கு மேலும் நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

புதிய போர்ச்சூழல் காரணமாக யுத்தத்துக்கு 250 கோடி ரூபாவை அமைச்சரவை ஒதுக்கத் தீர்மானித்துள்ளதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இத்தொகை மோட்டார் குண்டுகள், தோட்டாக்கள். துப்பாக்கிகள், யுத்த டாங்கிகளுக்கு தேவையான பிற பொருட்களையும் கொள்வனவு செய்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

புதிதாக ஒதுக்கப்பட்டுள்ள இந்த 250 கோடி ரூபா பாதுகாப்புக்கு ஒதுக்கப்பட்ட கடந்தகால செலவீனங்களை எட்டிப்பிடித்து விட்டதுஎன்று விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

யுத்தத்துக்கு பல கோடி ரூபா வீணுக செலவழிக்கபடுகின்றது என கடந்தகாலங்களில் கூறிய அரசாங்கம் தனது முதலாவது வரவுசெலவுத்திட்டத்தின்போது பாதுகாப்புக்காக ஒதுக்கிய நிதியானது கடந்தகால நிதி ஒதுக்குதலிலிருந்து பெரிய வேறுபாட்டை பெற்றிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# பற்றறிகள் பறிமுதல்

(அரியாலை)

கொழும்பிலிருந்து யாழ். வந்த பயணிகளிடம் தாண்டிக்குளம் தடைமுகாமில் வைத்து இராணுவத்தினர் இரண்டு பற்றறிக்கு மேல் கொண்டு சென்ற பயணிகளிடம் பற்றறிகளைப் பறித்ததாக இங்கு வந்தவர்கள் தெரிவித்தனர். 59

# லங்கா முடிதா கப்பலில் வந்த 473 தபால் பொதிகளும் காங்கேசனில் தவம்

(யாழ்ப்பாணம்)

'லங்கா முடிதா'' கப்பலில் வந்த 473 தபால் பொதிகளும் காங்கேசன் துறையில் தவம் கிடக்கின்றன.

உணவுப் பொருள்களுடன் வந்த லங்கா முடிதா கப்பல் காங்கேசன் துறையில் வைத்து படையினர் பொருள்களை இறக்கியிருப்பதால் கப்பல் காங்கேசன் துறையில் தரித்து நிற்கின்றன.

இதனுல் யாழ். மாவட்டத்துக்குரிய தபால் பொதிகளும் கப்பலில் தவம் கிடக்கின்றன.

இந்த தபால் பொதிகளை பருத்தித்துறைக்கு எடுத்து வருவதற்கான முயற்சிகளை யாழ். பிரதம தபாலகம் மேற்கொண்டு வருகின்றது. சி 170

# அம்பாறை மாவட்டத்தில் ஐவர் சுட்டுக் கொலை!

[அம்பாறை]

அம்பாறை மாவட்டத்தில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலின் 19 விசேட அதிரடிப்படையினர் பலியானதை அடுத்து நேற்று இப்பகுதியில் பெரும் தேடுதல் வேட்டை நடத்தியதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

இத்தேடுதல் வேட்டையில் விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தின்பேரில் ஐவர் சுட்டுக் கொல்லப்பட்டதாக கூறப்படுகிறது.

இத்தேடுதலின்போதுகொல்லப்பட்டவர்கள் தமிழர்களென தெரியவருகிறது. ரி

# ரூபவாஹினியை யுத்தப்பிரசாரத்திற்கு பயன்படுத்த அரசு நடவடிக்கை

[கொழும்பு]

அரசாங்கம் யுத்தத்தை தொடர்ந்து நடத்கப் போவதால் அதற்கு இலங்கை ஒலிபரப்பு கூட்டுஸ்தாபனத்தையும் ரூபவாஹினியையும் யுத்த பிரசாரத்திற்கு பயன்படுத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது,

அரசினரின் யுத்த பிரசாரத்திற்கு இடைரீரா இருந்த காரணத்தினலே ரூபவாஹினி கூட்டுத்தாபன தலைவர் பதவியிலிருந்து திரு வசந்த ராஜா இராஜினுமா செய்ய வேண்டிய நிலையேற்பட்டது.

போர் தொடர்பான பிரசாரங்களை மேற் கொள்வதற்கு பொருத்தமான ஒருவர் ரூபவாஹினி தலைவராக விரைவில் நியமிக்கப்படவுள்ளார்.

புதிய அரசாங்கம் பதவியேற்ற காலம் முதல் நந்தா மாலினியின் பாடல்கள் நிரோஷா விராஜினியின் சமாதானம் தொடர்பான ,வெண்புருவே, போன்ற பாடல்களை ஒலிபரப்பப்பட்டு வந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

தற்போது யுத்தபிரசாரத்தை உறுதிப்படுத்தும் வகையில் பிரேமதாஸாவின் ஆட்சிக் காலத்தில் யுத்தத்திற்காக ஒலி ஒளி பரப்பபட்ட 'யுத்த பிமே தனிகளே நத்தகிகிதென என்ற பாடல் கடந்த 30ம் திகதி இரவு முதன் முதலாக ஒலிபரப்பப்பட்டது. ரி

# கம்பன் விழாவின் மூன்றும் நாள் நிகழ்ச்சிகள்

[யாழ்ப்பாணம்]

அகில இலங்கை கம்பன் கழக 15வது ஆண்டு நிறைவுக் கம்பன் விழாவின் 3ம்நாள் நிகழ்ச்சிகள் இன்று காலை 9-30 மணிக்கும் மாலை 4-30 மணிக்கும் நல்லூர் கந்தசுவாமி கோவில் வடக்கு வீதியில் நடைபெறும்.

காலை நிகழ்ச்சியில் தலைமை உரையை வண. பிதா நீ. மரியசேவியர் அடிகளும் தொடக்கவுரையை பிரம்மஸ்ரீ ந. வீரமணிஐயரும் வாழ்த்துரையை வடமராட்சி கம்பன் கழக தலைவர் திரு மன்னவன் கந்தப்புவும் நிகழ்த்துவர்.

இதைத் தொடர்ந்து கருத்தரங்கம் இலக்கண வித்தகர் இ. நமசிவாய தேசிகர் தலைமையில் 'கம்ப சூத்திரம்' சிறப்பு நிகழ்ச்சி நடைபெறும்.

மாலை நிகழ்ச்சிகள் மாலை 4-30 மணிக்கு ஆரம்பமாகும் தலைமையுரையை திரு சி.சிவசரவணபவன் (சிற்பியும்) தொடக்கவுரையை பேராசிரியர் தயா சோமசுந்தரமும், வாழ்த்துரையை வைத்திய கலாநிதி மு. க. முருகானந்தமும். யாழ். இந்து ஆசிரியர் திரு. ச வே. பஞ்சாட்சரமும் நிகழ்த்துவர்.

இதைத்தொடர்ந்து கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளை தலைமையில் 'எண்ணங்கள் விரிந்து எங்கள் இதயங்கள் பேச வண்ணங்கள் தலைப்பாகட்டும்' எனும் தலைப்பில் கவியரங்கம் நடைபெறும். இதில் எட்டுக் கவிஞர்கள் பங்குபற்றுவர். விழாவின் இறுதி நிகழ்ச்சியாக மானிப்பாய் 'கலைக் கோயில்' வழங்கும் ஆடல் வேள்வி ''இராமாயணக் காட்சிகள்'' இடம்பெறும். ர-சி

# புலிகளிடம் ஏவுகணை இருப்பதாக ஏற்கனவே எச்சரிக்கப்பட்டதாம்

(கொழும்பு)

வடபகுதியில் அவ்ரோ விமானங்கள் சுட்டு வீழ்த்தப்படு முன்னர் வெளிநாட்டு புலனுய்வு பிரிவு ஒன்று விடுதலைப்புலிகள் ஏவுகணைகளை கொள்வனவு செய்துவிட்டதாக இலங்கை அரசுக்கு எச்சரித்திருந்ததாம்.

இக்கருத்தினை அரசுடன் சேர்ந்து இயங்கும் தீவிரவாத குழு தலைவர் ஒருவரும் கூட வெளிப்படுத்திபிருந்தாராம்.

அவர் உயர் அரசுத்தலைவர்களைசந்தித்துஇதனை தெரிவிக்க முடியாமல் போகவே கீழ் மட்டத்திலுள்ள அதிகாரிகளுக்கு அவர்வெளிப்படுத்திருராம்.

ஆனல் அந்த அதிகாரிகள் அச்செய்தியை கவனத்தில் எடுக்காததோடு இப்படியான வதந்திகளை பரப்பவேண்டாமெனவும் கூறியிருந்தனராம்.

இலங்கை புலனுய்வுப்பிரிவு. புலனுய்வு தகவல்களை மதித்து நடக்கிறதா என கேள்வி எழுப்பியுள்ளது ''ஐலன்ட்பத்திரிகை'' தே-சி

# வலிகாமம் மேற்குபகுதியில் புகையிலைச் செய்கைபாதிப்பு

(யாழ்ப்பாணம்)

அண்மையில் பெய்த மழையினுல் வலிகாமம் மேற்குப் பகுதியில் புகையிலைச் செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

சங்கரத்தை, அராலி, கட்டுடை, மானிப்பாய், வட்டுக்கோட்டை, சங்கானை ஆகிய பகுதிகளிலே புகையிலைப் பயிர்கள் மழை வெள்ளத்தில் அழிந்துள்ளன.

இதேவேளை இப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சிறுதானிய பயிர்ச்செய்கையும் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன. 170-ரி

# 10,000 கோடி ரூபாவுக்கு ரஷ்யாவிடமிருந்து ஆயுத கொள்வனவு

(கொழும்பு)

பொ. ஐ. மு. அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின் ஜனுதிபதி சந்திரிகா குமாரதுங்கவினுல் மோசடி இடம்பெற்றுள்ளதெனக் கூறப்பட்டு இரத்துச் செய்யப்பட்ட ஐ. தே. க. அரசாங்கத்தின் பிரபல்யம் வாய்ந்த 10,000 கோடி ரூபா ரஷ்ய ஆயுதக் கொள்வனவு தமிழீழ விடுதலைப்புலிகள் மீள யுத்தத்தை ஆரம்பித்திருப்பதைச் சாட்டாக வைத்து திரும்பவும் செயற்படுத்தவுள்ளதாகத் தெரியவருகிறது.

இவ்ஆயுதக் கொள்வனவின் மூலம் மொத்தக் கொள்வனவுப் பெறுமதியில் 30 வீதத்தினை இவர்கள் கொமிசனுகப் பெற்றுக் கொள்வார்கள் என்றும் தெரிவிக்கடபடுகிறது.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்திலிருந்து தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் ஏப்ரல் 19ம் திகதி வாபஸ் பெற்றுக் கொண்டவுடன் பாதுகாப்புப் படையினருக்கு உடனடியாக ஆயுதங்கள் வாங்க அரசாங்கம் எடுத்த முடிவின் போர் வையில் பாதுகாப்புப் பிரிவுத் தூதுக்குழுவொன்று ஏப்ரல் 21ம் திகதியே இரத்துச்செய்யப்பட்ட ஆயுதக் கொடுக்கல் வாங்கல்களைச் செயறபடுத்

(5-ம் பக்கம் பார்க்க)

# தரைவழி தொடர்புக்கு ராணுவம் முயன்றால் மிகப்பெரும் போர் வெடிக்கலாம்

வடபகுதி முகாங்களுக்கான விநியோகங்களை ஆகாய கடல் மார்க்கமாக மேற்கொள்ள முடியாத சூழ்நிலை அரசாங்கத்திற்கு ஏற்படின் அது தரைமார்க்கமாக அதனைச் செய்யவேண்டிய கட்டாயம் ஏற்படும். அப்படிச் செய்யும் சர்ந்தப்பத்தில் இந்த நாடு இதுகாலவரை சந்தித்திராத ஒரு போரை எதிர் கொள்ள நேரிடும், அதில் இரண்டாம் கருத்துக்கு இடமிருக்காது.

இவ்வாறுஜெகான் பெரேரா சண்டே ஐலண்டில் எழுதிய கட்டுரையொன்றில் தெரிவித்துள்ளார், அதில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது.

இரண்டாம் உலகப் போரின் போது, ஜேர்மனிய நகரங்கள் தயவுதாட்சணியமின்றி குண்டு வீசி அழிக்கப்பட்டன அதேபோல்ஜப்பானிய நகரங்களும் நாசமாக்கப்பட்டன. ஒருபோரில்வெல்வதற்கு இப்படியான அழிவு நாசகார வேலைகள் தேவைதானு என்பது பற்றி தற்போதும் விவாதிக்கப்படுகிறது. அந்தப் போர் வெவ்வேறு நாடுகளுக்கிடையே நடைபெற்ற மோதல்களாகும் அதுபோலன்றி சண்டையின் பின் இங்கு நாம் ஒன்ருகவாழ வேண்டிய சூழ்நிலையும் உண்டு.

அப்படியான போரை தொடர்வதா தடுப்பதா என்பதை சிந்திக்கும் தருணம் இதுவாகும். ஆனுல் போர் ஆரம்பமானபின் அரைகுறை எண்ணமோ, மனித உரிமைகள் பற்றி சிந்தனைக்கோ இடமிருக்காது. ஜே.வி.பி. தீவிர வாதிகளின் போராட்ட காலத்தில் ஏற்பட்டதுபோன்றபாரிய பாதிப்பு மக்களுக்கு ஏற்படுவதை தவிர்க்கமுடியாது போகும்

ஆகவே மனக்கட்டுப்பாட்டைப் பேணுவதும்நடுநிலைமை வகிப்பதற்கும் இது தருணமாகும்.

ஜனுதிபதி சந்திரிகா குமாரதுங்க, மிகவும் நம்பிக்கையோடும் விறுவிறுப்போடும் மேற்கொண்டிருந்த - பேச்சுவார்த்தை மூலமாக தனது சமாதான முயற்சியில்-கடந்த மாதத்திலிருந்து நம்பிக்கை இழந்துள்ளார். பிரச்னையில் கடுமையாக இருந்தாலும் மனிதன் என்ற விடயத்தில் பசுமையாக இருக்கவேண்டுமென்று காவாட் பல்கலைக்கழகத்தைச்சேர்ந்த பேராசிரியர் ருஜர்பிஸ்ஸர் கூறியிருப்பது இங்கு நினைவு கூரத்தக்கது.

திரு. பிரபாகரன் இல்லையேல் தமிழர் பிரச்னையை சுமுகமாக தீர்கலாமெனவும் திருமதி குமாரதுங்க கூறியுள்ளார். திரு. பிரபாகரனை, தனது எண்ணக் கருத்தின்படி ஜனுதிபதி இப்படி வர்ணித்திருப்பது, வருங்காலத்தில் அவருடன் சமாதான பேச்சை மேற்கொள்வதை கடினமாக்கியுள்ளது

கியூபா நாட்டுத்தலைவர் பிடல் கஸ்ரோ, கறிபியன் பிரதேசத்தில் பிரச்னைக்கு உரியவர் எனக் கூறி, அமெரிக்கா அவரை ஓரங்கட்டியது. இப்போதும் அவருடன் பேச மறுக்கிறது. கஸ்ரோ போனுல் கியூபாவுடனுன பிரச்னைகள் தீரும் என அமெரிக்கா எண்ணியது. அவர் மன்னிக்க வேண்டும் அல்லது தொலையவேண்டும் என எண்ணியது. ஆனுல் கஸ்ரோ தொடர்ந்தும் பதவி வகித்து வருகிருர்.

ஆகவே ஜனுதிபதி குமாரதுங்க, தனது சொந்தஉணர்ச்சியினுல் உந்தப்பட்டு பகிரங்க அறிக்கைகளை விடுப்பதனை தவிர்த்துக்கொள்வதோடு, கவனமாகவும் இருக்கவேண்டும். முன்னுள் ஐ. தே. க. அரசை, 2500 வருடங்களில் கண்டகொடியஅரசு என வர்ணிக்கின்ருர். எதிர்க்கட்சியை ஜனநாயக அமைப்பில் தேவையென உணராது மோசமாக வர்ணிப்பது விரும்பத்தக்கதல்ல. இவையெல்லாம் அரசியல் அனுபவக் குறைவையே புலப்படுததுகிறது.

மந்திரிசபை, ஜனுதிபதிக்கு இப்படியான கூற்றை விடுமாறு அனுமதி வழங்கவில்லை. அரசாங்கம் என்பது ஒரு தனி மனிதனுடையது அல்ல.

நாட்டில் தமிழர் பிரச்னையை அரசியல் ரீதியில் தீர்ப்பதற்கே மக்கள் ஆணையிட்டனர். மக்கள் போரை விரும்பவில்லை ஜனுதிபதியாக தெரிவான திருமதி குமாரதுங்கவும், மக்கள் தனக்கு சமாதான தீர்வை காணுமாறும் சண்டையை தவிர்க்குமாறுமே ஆணையிட்டதாக கூறினுர்.

ஜனுதிபதி சந்திரிகா குமாரதுங்க தேர்தல் காலத்தில், தான் சொன்னதை செய்வதாக பிரசாரம் செய்தார், பின் பொருளாதார தடைகள் பலவற்றை அரசுநீக்கியது. ஆனுல் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட அரச குழுவினர் புலிகளின் மனதில் நம்பிக்கையை ஏற்படுத்தத் தவறிவிட்டனர்.

அரசினது சமாதான முயற்சிகள், புலிகளை ஓரங்கட்டுவதாகவிமர்சிக்கப்பட்டது சமாதான பிரியராக அரசு தன்னை காட்டி, அரசியல் வாபம்தேட முயன்றது. இதனை புலிகளோ வேறு எவருமோ விரும்பமாட்டார்கள்.

முன்னர் நடந்த பேச்சுவார்த்தையினுல் ஏற்பட்ட தவறுகளை உணர்ந்து எனிநடந்துகொள்ளலாம். ஏதோ ஒரு வழியில் மீண்டும் ஏதோ ஒரு நாள் சமாதான பேச்சு நடந்தேயாக வேண்டும் என்றும் அவர் தேரிவித்துள்ளார்

கே-சி

## பொலிஸிலும்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் மா அதிபருக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எம்பிலிபிட்டிய பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரே இத்தகைய கோரிக்கையொன்றை விடுத்துள்ளாராம்.

இது தொடர்பாக அவர் பொலிஸ் மா அதிபருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

இதுபோன்ற கோரிக்கை ஒன்றை முன்னுள் இராணுவ அதிகாரிகள் சங்கம் ஜனுதிபதி சந்திரிகாவிடம் நேற்றுக்காரிக்கை விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது. -ரி

## 10,000

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தும்முகமாக ரஷ்யாவுக்குப் புறப்பட்டுச் சென்றது.

25 வருட நீண்டகால அடிப்படையில் கடற்படை தாக்குதல் படகுகளை வழங்க இலங்கையுடன் ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டுள்ள சீனுவின் விலையைவிட அதிகமாக 40 வீதம் விலை கொடுத்து உடனடிப் பணத்திற்கு ரஷ்யாவிலிருந்தும் இஸ்ரேலிலிருந்தும் தாக்குதல் படகுகளை வாங்க நடவடிக்கை எடுப்பதே இவ்ஆயுதக் கொள்வனவில் பாரிய சந்தேகத்தை தோற்றுவிக்கும் சம்பவமாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதலென்ற போர்வையில் ஆயுதக் கொள்வனவை தொடக்கியுள்ளவர்கள் இஸ்ரேலிலிருந்து டோரு படகுகள் ஒன்பதையும் ரஷ்யாவிலிருந்து பல்நோக்கு கடற்படகுகள் இரண்டையும் வாங்குமாறு கடற்படை தளபதியை வற்புறுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை 3ம் ஈழப் போரில் ஈடுபடவென இலங்கை அரசாங்கம் விமானங்கள், ஹெலிகொப்டர்கள், கவச வாகனங்கள், கனரக ஆயுதங்கள் போன்றவற்றை கொள்வனவு செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ரி

# மட்டக்களப்பில் மீன்பிடித் தடையினுல் 12,983 குடும்பங்கள் பெரும்பாதிப்பு

(மட்டக்களப்பு)

மீன்பிடித் தடையினுல் மட்டக்களப்பு மாநகரசபை எல்லைக்குள் 2315 குடும்பங்களும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 12983 குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை மட்டு மாவட்டத்தில் மீனுக்கும் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மீன்பிடித்தடை காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டுமென்று மட்டு நகரிலுள்ள பொது அமைப்புக்கள் அரசை வலியுறுத்தியுள்ளன.

மீன்பிடித் தடையைத் தொடர்ந்து கல்குடா கடற்கரை தொடக்கம் ஓட்டமாவடி, மீராவோடை வரையுள்ள வாவியோரங்களில் ஆழ்கடல் மீன்பிடிப் படகுகள், தோணிகள் என்பன கரையேற்றி வைக்கப்பட்டுள்ளன.

இதனுல் சிறிய அளவில் மீன்பிடித் தொழிலை வாவிகளிலும் குளங்களிலும் மேற்கொண்ட மீனவர்கள் கூட பாதிப்படைந்துள்ளனர். வாழைச்சேனை வாவியில்இரவு வேளையில் மீன்பிடிப்பதற்கு தடை செய்யப்பட்டுள்ளதால் தமிழ், சிங்கள, முஸ்லிம் மீனவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். கொழும்புக்கு மீன் அனுப்புவோரும் தொழில் இழந்துள்ளனர். இப்பகுதி மக்கள் இரவு வேளைகளில் எதுவித நடமாட்டமுமின்றி வீடுகளில் முடங்கிவிடுகின்றனர்.

இதேவேளை உள்நாட்டு, வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் அதிகரித்துக் காணப்பட்ட கல்குடா, பாசி குடா கடல்பகுதி கடல்வலய தடைச் சட்டம் காரணமாக வெறிச்சோடிக் காணப்படுகிறது

கல்குடா பொலிஸ் நிலையமும் பலப்படுத்தப்பட்டு வருகிறது. இரவுநேர பகல்நேர ரோந்து நடவடிக்கைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. பொலிஸ்நிலையம் முன்பாக உள்ள வீதியில் நடந்து சென்றே கடக்க வேண்டு்.

# ராணுவ கூட்டு தலைமையகம் இரு இடங்களில் அமையும்

(கொழும்பு)

கொழும்பிலும் அநுராதபுரத்திலும் ராணுவ கூட்டுத் தலைமையகங்களை அமைக்க பாதுகாப்புசபை திட்டமிட்டுள்ளது.

இந்த வாரம் கூடும் பாதுகாப்பு சபை, வடபகுதி மீதான பாதுகாப்புபற்றி ஆராயும்போது இந்த யோசனையை தீவிரமாக ஆராயவுள்ளது.

அண்மையில் இலங்கை வந்த அமெரிக்க ராணுவ அதிகாரிகள் குழு, இந்த கூட்டு நடவடிக்கை முகாம்களை அமைக்கும்யோசனையை முன்மொழிந்து சென்றதும் நினைவு கூரத்தக்கது.

இதேநேரம் விடுதலைப் புலிகள் வெளிநாட்டு ராணுவ உதவியை இலங்கை அரசு பெறுவதினை விரும்பவில்லை என்றும் அப்படி வெளிநாட்டு உதவிபெறும்பட்சத்தில்அதனையும் எதிர்த்து போராடுவர் என புலிகளின் குரல் வானொலி தெரிவித்ததாக, பாதுகாப்பு ஆய்வாளர் 'சண்டே லீடரில்' தெரிவித்துள்ளார். கே-ரி

# விசேட அதிரடிப் படைக்கு ரூ. நாலரைக்கோடி ஒதுக்கீடு

(கொழும்பு)

கடந்தஐ. தே. க. ஆட்சிக் காலத்தின் போது படுகொலை இராணுவமாக நிகழ்ந்த விசேட அதிரடிப்படைக்கும் (எஸ் ரி எவ்.) தேசிய புலனாய்வு பணியகத்திற்கும் (என் ஐ பி) பொ. ஐ. மு. அரசாங்கத்தின் கீழ் கோடிக்கணக்கான ரூபா பணம் ஒதுக்கப்பட்டதாக பாதுகாப்பு பிரிவு தகவல்கள் தெரிவிக்கின்றன. அதிரடிப்படைக்கும், தேசிய புலனாய்வு பணியகத்திற்கும் நவீன வீ, எச். எஸ், யூ. எச் எப். உபகரணங்களை வாங்குவதற்காக 10 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது,

தேசிய புலனாய்வுதுறையினருக்கு வீடுகள் கவீகரித்தலுக்காக 10 லட்சம் ரூபாவும் மேலதிகமாக வழங்கப்படவுள்ளது,

ஏனைய நிர்வாக செலவுகளுக்காக அவர்களுக்கு 25 லட்சமும் விசேட அதிரடிப்படையினருக்கு பெருந்தொகைப் பணமான 4/71 கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது, ரி

# உணவு முத்திரை பொருட்கள்

[யாழ்ப்பாணம்]

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவு சங்கம் பங்குனி சித்திரை மாதங்களுக்கான மாணவர் உணவு முத்திரைகுரிய பொருட்களை வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக சங்க தலைவர் எஸ். செல்வரத்தினம் தெரிவித்தார், 170-ரி


# கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான திரு. கே. கருணுகரனின் (இலங்கை வங்கி-சுன்னுகம்) தாயாரின் மறைவையொட்டி அன்னுரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும், கண்ணீர் அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம்

ஏ-4924)


## நரோமா பயணிகள் கவனத்திற்கு

(யாழ்ப்பாண.)

யூன் 1 ம் திகதி நரோமா' கப்பலில் பயணம செய்வதற்கு ஏற்கனவே யாழ். செயலகத்தில ஆசனத்திறகு பதிவு செய்தவர்கள் எதிர்வரும் 12-05-95ம் திகதி வெள்ளிக்கிழமை செயலகத்திற்குவந்து ஆசனத்திற்கான பணத்தைச் செலுத்தலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. -சி

## க. பொ. த.

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர் இன்னும் இரண்டு வாரத்துள் பரீட்சைக்கான கேள்விக் கொத்துக்கள் கொடுக்கப்படாதுபோனுல் பரீட்சை பின்போடப்படும் நிலை தோன்றும்.

இதேவேளை வேறுபரீட்சைகளும் இவ்வேலைநிறுத்தத்தால் பாதிக்கப்படலாம் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தொழிற் சங்க நடவடிக்கையைக் கைவிட்டு அன்ருட கடமைகளை மேற்கொள்ளுமாறு கல்வி உயர்கல்வி அமைச்சர் திரு. ரிச்சர்ட் பத்திரன அவசர வேண்டுகோளை விடுத்துள்ளார் -ம-சி

## வெளிநாட்டு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்ட அரசாங்கத்தின் கடமையும் இதுவாகும்.

இராணுவ நடவடிக்கை எப்பகுதியிலும் வெற்றியளித்ததாக சரித்திரமில்லை. அப்படியான நடவடிக்கை அழிவினையே தந்துள்ளது சிலபத்திரிகைகளின் அறிக்கைப்படி அரசாங்கம் வெளிநாட்டு இராணுவத்தை நாடுவதாக தெரிகிறது. அநியாயமாக அப்பாவி மக்கள் அழியும் செயலில் அரசாங்கம் இறங்காது என்பதில் எமக்கு நம்பிக்கையுண்டு.

வெளிநாட்டு இராணுவ உதவியை தவிர்த்து வெளிநாட்டு மத்தியஸ்தத்தை நாடுவது சாலச் சிறந்தது. இதுகாலவரை அரசியல் தீர்விலே நம்பிக்கை கொண்டிருந்த இந்த அரசு சடுதியாக இராணுவ நடவடிக்கைக்கு திரும்புவது வரவேற்கத்தக்கது அல்ல என்றும் அவர் கூறினுர். -கே-சி

## ஒரு லட்சம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புபபதது...கம...ான்று தெரிவித்துள்ளது.

அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கையில்: 1971 ல் ஜே. வி. பி. கிளர்ச்சியை அடக்க அப்போதைய பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவினுலும் பின்னர் 1987 இல் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின்படி அப்போதைய ஜனுதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தனுவினுலும் இந்தியப் படைகள இலங்கைக்கு அழைக்கப்பட்டன.

1971 ல் இந்தியா ஏழுபோர் விமானங்களையும் விமான ஓட்டிகளையும் 155 கூர்க்காப் படைகளையும் அனுப்பியிருந்தது. 1987ல் ஒருலட்சம் இந்தியப்படையினர் டாங்கிகள், போர் விமானங்கள் மற்றும் கனரக ஆயுதங்கள் சகிதம் இலங்கைக்கு வந்திறங்கினர்,

1971 ல் 14,000 பேரும், 1987-90 காலப்பகுதியில் 6000 பேரும் இந்தியப்படையினரால்கொல்லப்பட்டதுடன் கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான சொத்துக்களும்: உடைமைகளும் அழிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது எனவும் குறிப்பிட்டுள்ளது சி

# ரத்வத்தை, ஜெரி, பலபத்தபெண்டி 2வது அவ்ரோவில் வரவிருந்தனர்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் இரண்டாவது ஏவுகணைத் தாக்குதலுக்குள்ளாகிய அவ்ரோ விமானத்தில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த, ஜனாதிபதியின் செயலாளர் பாலபத்தபெண்டி, பாதுகாப்பமைச்சின் செயலாளர் சந்திரானந்த டி சில்வா, இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா ஆகியோர் பலாலிக்கு வர ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததாக 'லங்காதீப' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இது பற்றி 'லங்காதீப' மேலும் தெரிவிக்கையில்: கடந்த 28ம் திகதி விடுதலைப் புலிகளின் ஏவுகணைத் தாக்குதலுக்கு இலக்காகிய முதலாவது 'அவ்ரோ' விமானம் சம்பந்தமாக விசாரணை செய்வதற்கு இந்த இரண்டாவது விமானத்தில் இவர்கள் பிரயாணம் செய்ய இருந்தார்களாம்.

இந்த முக்கிய பிரமுகர்கள் மறுநாள் அவ்ரோ விமானத்தில் பலாலி செல்ல இருந்தமை பற்றிய தகவல் விடுதலைப் புலிகளுக்கு முன்பே தெரிந்திருந்தாகவும் குறிப்பிட்டுள்ளது.

எனினும் இறுதிநேரத்தில் இவர்களின் பயணம் ரத்தாகிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ம-சி

# மருத்துவபீட மாணவரின் உண்ணாவிரதம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தனியார் மருத்துவக் கல்லூரி மாணவர்களை யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் இணைப்பதனை எதிர்த்து மருத்துவ பீட மாணவர்கள் சுழற்சி முறையிலான உண்ணாவிரதத்தில் குதித்துள்ளனர்.

இந்த சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் நேற்று காலை 9 மணிக்கு ஆரம்மாகிறது.

யாழ். பல்கலைக்கழக முன்பகுதி மைதானத்தில் விசேடமாக அமைக்கப்பட்ட பந்தலில் மாணவர்கள் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர், முதற் கட்டமாக ஐந்து மருத்துவபீட மாணவர்கள் ஐந்து நாட்கள் நீர் மட்டும் அருந்தி உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளனர்.

இவர்களுக்கு ஆதரவாக ஏனைய பீட மாணவர்களும் நேற்றைய உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டனர். -170-சி

# இலங்கை படைக்கு திட்டங்களை அமெரிக்க அதிகாரிகள் வகுப்பர்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தற்போதைய நடவடிக்கைகளுக்கு முகம் கொடுப்பதற்கு சில தற்காலிக யோசனையையும் நிரந்தர நடவடிக்கைக்கான சில திட்டங்களையும் இலங்கை வந்துள்ள அமெரிக்க படை அதிகாரிகள் இலங்கைப் படையினருக்கு வகுத்து கொடுக்கவுள்ளனர்.

அமெரிக்காவிலிருந்து இங்கு வந்துள்ள விசேட நடவடிக்கைகள் பிரிவை [Special Operation Unit] சேர்ந்தவர்கள தற்போது இத்திட்டங்களை வகுப்பதில் ஈடுபட்டு வருகின்றனர். இத்திட்டம் தயாரிக்கப்பட்ட பின்னர் முழு அறிக்கையையும் ஜனாதிபதி சந்திரிகாவிடம் ஒப்படைக்கப்படும்.

இலங்கைப் படையினருக்கு இக்குழு தெரிவித்துள்ள ஆலோசனைப்படி விடுதலைப் புலிகளின் உளவுப்பிரிவை முறியடிக்கக்கூடிய விதத்திலான ஒரு விசேட உளவுப்பிரிவை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இவர்களின் ஆலோசனையின் பேரிலேயே முப்படைகளும் ஒருங்கிணைக்கப்பட்ட விசேட அதிகாரங்களுடைய அதிகாரியாக வடக்கு-கிழக்குப் பகுதியில் மேஜர் ஜெனரல் ஏ. எம். யு. செனிவிரத்ன நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சி

# அத்தியாவசிய பொருட்கள் எடுத்துவர ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்துக்கு வேண்டிய அத்தியாவசியப் பொருட்களை ஒழுங்காகவும், விரைவாகவும் எடுத்து வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. கே. பொன்னம்பலம் தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்: அத்தியாவசிய சேவைகள் திணைக்கள அதிகாரிகளுடன் யாழ் மாவட்டத்துக்கு அனுப்பிவைக்கப்படவேண்டிய அத்தியாவசியப் பொருட்கள் பற்றி ஆராயப்பட்டது. இப் பொருட்களை ஒழுங்காகவும் விரைவாகவும் எடுத்துவருவதில் தான் நம்பிக்கை இழக்கவில்லையென்றும் தெரிவித்தார் (162-சி)

# இராணுவத்திற்குஆட்சேர்ப்பு 17ம் திகதி ஆரம்பம்

(கொழும்பு)

இராணுவத்திற்கு பெருமளவு இளைஞர்களை சேர்க்கும் வேலைகள் 17ம் திகதி முதல் 19ம் திகதி வரை நாட்டின் பல பகுதிகளிலும் நடைபெறவுள்ளது.

8ம், 9ம் வகுப்புகளில் சித்தியடைந்தவர்கள் படைகளில் சேர்க்கப்படுவர் எனவும் அரசு அறிவித்துள்ளது. இந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கை அம்பாறை, கந்தளாய், நுவரெலியா, அம்பாந்தோட்டை, இரத்மலானை, காலி, உட்பட பத்திற்கும் மேற்பட்ட இடங்களில் நடைபெறவுள்ளது.

படைகளில் வந்து சேருமாறு தெற்கின் பல பகுதிகளிலும் கவர்ச்சிகரமான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# இந்திய உதவியை பெறுமாறு இலங்கை படையினர் வற்புறுத்து

(கொழும்பு)

இந்தியாவிடமிருந்து படை உதவியைக் கோருமாறு இராணுவ தரப்பிலிருந்து கோரிக்கைகள் எழுந்துள்ளதாக தெரிய வருகிறது.

இன்றைய நிலையில் அரசாங்கம் யுத்தத்தை நோக்கிச்செல்வதால் இதைவிட வேறு சிறப்பான வழி இருக்கமுடியாதென அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி சந்திரிகா பாரிஸிலிருந்து இலங்கை திரும்பிய பின் நடைபெற்ற முப்படைகளின் உயரதிகாரிகள் பங்குபற்றியகூட்டம் சுமார் 12மணி நேரம் நடைபெற்றுள்ளது. இதில் இராணுவ சம்பந்தப்பட்ட முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இக் கூட்டத்திலே வெளிநாட்டு உதவியின் அவசியம் பற்றி இராணுவ அதிகாரிகள் வலியுறுத்தியதாகவும் படையினரின் கோரிக்கைகளை ஜனாதிபதி சந்திரிகா கவனத்திலெடுத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## வவுனியா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வவுனியாவில் கடந்த இருவாரத்தில் 12க்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட நிலையில் வீதிகளில் சடலங்கள் போடப்பட்டுள்ளன. இவர்கள் அனைவரும் இராணுவத்தாலேயே சுட்டுக்கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -சி

## இராணுவ

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவ உயர் அதிகாரிகள் குழு ஜனாதிபதி சந்திரிகாவின் இந்தியப் பயணத்திற்கு முன்பாக புதுடில்லி சென்றுள்ளது.

இக்குழு புதுடில்லியில் இந்திய இராணுவ அதிகாரிகளையும், பாதுகாப்பு அமைச்சு மற்றும் அரசு அதிகாரிகளை சந்தித்து பேச்சுக்கள் நடாத்துவர். இவர்கள் தமது விஜயத்தின்போது பல விடயங்கள் பற்றியும் ஆராய்வர் எனவும் தெரிவிக்கப்படுகிறது, சி

# நீர்மூழ்கிக் கப்பலும் புலிகளிடம் உள்ளதாம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளிடம் தற்போது நீர்மூழ்கிக் கப்பலும் இருப்பதாக படையினர் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

விமான எதிர்ப்பு ஏவுகணைகளை அவர்கள் பெற்றிருப்பது தற்போது நிரூபிக்கப்பட்டுள்ளது. எனினும் அவர்கள் வசம் நீர்மூழ்கிக்கப்பலும் இருக்க வேண்டுமென படைவட்டாரங்கள் சந்தேகம் தெரிவிக்கின்றன.

இலங்கை-இந்திய கடற்படையினரின் தீவிர ரோந்து நடவடிக்கைகள் இருந்தபோதும் புலிகள் வசம் வந்து சேர்ந்துள்ள இராணுவ தளபாடங்கள் குறித்து படைவட்டாரங்கள் பெரும் அதிர்ச்சியடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

# இசை விழா பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நல்லூர் கோட்ட இசை ஆசிரியர்களுக்கு வார இறுதியில் நடைபெறவிருந்த இசை விழா பின்போடப்பட்டுள்ளது என அறிவிக்கப்படுகிறது. -சி

## அம்பாறையில்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ந்தபோதும் உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது. பூமியதிர்ச்சி ஏற்பட்டபோது மக்கள் அவலக்குரல் எழுப்பியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -சி

## தீர்வை

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வுத் திட்டத்தை நான் முன்கூட்டியே தயாரித்து விட்டேன், அத்தீர்வுத்திட்டம் என்ன என்பதை தற்போது தெரிவிக்கப்போவதில்லை.

இத்தீர்வுத் திட்டத்தை நான் தற்போது பகிரங்கமாக வெளியிட்டால அது சிங்கள மக்கள் மத்தியில் கலவரத்தையும்-குழப்பத்தையும் ஏற்படுத்திவிடும் என்று அஞ்சுகிறேன். ஆனாலும் என் தீர்வுத் திட்டத்தை முதலில் விடுதலைப் புலிகளிடமே காண்பிக்க விரும்புகிறேன் என்றார்

ஜனாதிபதியின் இக்கூற்றுக் குறித்து தமிழ்க் குழுக்கள் கருத்துத் தெரிவிக்கையில்: கடந்த 40 ஆண்டுகால சிங்கள அரசுத் தலைமைகள் இது போன்ற போலிக் கோரிக்கைகளினால் தமிழர்களை ஏமாற்றி வந்துள்ளார்கள். ஜனாதிபதி சந்திரிகா, துணிச்சலாக இனப்பிரச்னைக்கான தமது தீர்வுத் திட்டத்தை வெளியிடாவிட்டால் பிரச்னை ஒருபோதும் தீரப்போவதில்லை.

ஜனாதிபதியுடனான நேற்றைய சந்திப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட், ஈ. பி. ஆர். எல். எவ். ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். இவர்களுக்கிடையிலான 2வது சந்திப்பு இந்தவாரம் நடைபெறவுள்ளது. வி சி

# விமானப்படை தளபதி பதவிநீக்கப்படலாம்

(கொழும்பு)

இரண்டு அவ்ரோ விமானங்கள் ஏவகணைத் தாக்குதலுக்கு உள்ளாகியதையொட்டி, விமானப்படைத் தளபதி ஏயர் வைஸ் மார்ஷல் ஒலிவர் ரணசிங்க ராஜினாமாச் செய்யலாம் அல்லது பதவியிலிருந்துநீக்கப்படலாமென்று ஹிரு' பத்திரிகை செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது.

முதல் விமானம் ஏவுகணையால் தான் தாக்கப்பட்டது என்று அறிந்திருந்தும் இரண்டாவது 'அவ்ரோ' விமானத்தைப் பலாலிக்கு அனுப்பி வைத்ததினால் அவர் பதவியிலிருந்து நீக்கப்படவுள்ளார் என்றும் கூறப்படுகிறது.

இவரின் இடத்துக்கு புதியவர் ஒருவரை நியமிப்பது குறித்து பாதுகாப்புச்சபையில் இழுபறிநிலை தோன்றியுள்ளதாகவும 'ஹிரு' மேலும்தெரிவித்துள்ளது. (ம-சி)

## பலாலி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தளபதிக்கு உத்தரவிட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வடபகுதியிலுள்ள இராணுவ முகாம்களுக்கு உணவுப் பொருட்களை கடல் மார்க்கமாக அனுப்புவதில் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளதினாலேயே மேற்படி உத்தரவை பாதுகாப்பு அமைச்சு பிறப்பித்துள்ளது,

பலாலியில் 3 ஆயிரம் படையினரும், பூநகரியில் 5 ஆயிரம் படையினரும் தீவகப்பகுதி, ஆனையிறவு, வெற்றிலைக்கேணி ஆகிய முகாம்கள் உட்பட மொத்தம் 20 ஆயிரம் படையினர் தற்போது இருக்கின்றார்கள்,

இந்த முகாம்களில் தற்போது சிக்கியிருக்கும் படையினருக்கு உணவு பொருட்கள், ஆயுதங்கள். மருநது வகைகள் முக்கியமாக தேவைபடுவதனாலேயே பலாலி விமான நிலையத்தில் விமானங்களை தரை இறக்குவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளுமாறுஉத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக செய்திகள்தெரிவிக்கின்றன. -வி-சி

## ஈரப் பெரியகுளம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று அதிகாலை 5-15 மணியளவில் மேற்படி பொலிஸ் நிலையத்தின் மீது விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதலை மேற் கொண்டனர். இதில் சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர் உட்பட 11 பொலிசாரும், 5 ஊர்காவல் படையினரும், இம்மோதலின் நடுவில் சிக்குண்ட ஒரு பொலிசின் மனைவி உட்பட மொத்தம் 17 பேர் பலியாகியுள்ளனர். 6 பொலிசார் படுகாயமடைந்துள்ளதாகவும், இருவரைக் காணவில்லையென்றும் கூறப்படுகின்றது.

சுமார் 30 நிமிடங்கள் நடைபெற்ற இத் தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் பொலிஸ் நிலையத்தை முற்றுக எரித்து அழித்ததுடன் அங்கிருந்த பெருவளவு ஆயுதங்களையும் தம்முடன் எடுத்துச் சென்று விட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்தாக்குதல் பற்றி ரூபவாஹினி தெரிவிக்கையில்: 200க்கும் மேற்பட்ட புலிகள் இந்த பொலிஸ் நிலையம் மீது தாக்குதல் நடத்தினர். தாக்குதல் நடைபெற்றபோது அங்கு 33 பொலிசார் இருந்தனர். இத் தாக்குதலில் சப் இன்ஸ்பெக்டர் சைகுலதுங்க என்பவர் கொல்லப்பட்டார்.

சப் இன்ஸ்பெக்டரின் இரு பிள்ளைகளும் 11 பொலிசாரும் தாக்குதலில் காயமடைத்தனர். பொலிஸ் நிலையம் முற்றுக அழிக்கப்பட்டதுடன் காவலரண்கள் தீயிடப்பட்டன. அங்கிருந்த வாகனங்களும் பெருமளவு சேதமடைந்துள்ளதாகவும் குறிப்பிட்டது. க-வி-சி

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு மே மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Neaws paper at the General Post office Sri Lanka under Licence number B/1633613.